நகராட்சி அலுவலகம்,
களக்காடு.

நாள். 26.07.2022.

களக்காடு நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2022ம் வருடம் ஜுலை மாதம் 28ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

**முன்னிலை: திருமதி. கா. சாந்தி, எம்.ஏ., பி.எட்.,**
**நகர்மன்ற தலைவர்**
**களக்காடு நகராட்சி.**

<table>
<tr><th>நாள்.</th><th>தீர்மான எண்.</th><th>மன்ற பொருள்</th><th>மன்றத்தின் முடிவு</th></tr>
<tr><td>28.07.22</td><td>103</td><td>

**பொருள் எண். 01**

களக்காடு நகராட்சியில் 06/2022 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகளை பதிவு செய்ததை பார்வையிட்டு அங்கீகரிக்க வேண்டியது.

<table>
<tr><th rowspan="2">வ. எண்.</th><th rowspan="2">மாதம்</th><th colspan="3">பிறப்பு</th><th colspan="3">இறப்பு</th><th colspan="3">இறந்து பிறந்தவை</th></tr>
<tr><th>ஆண்</th><th>பெண்</th><th>மொத்தம்</th><th>ஆண்</th><th>பெண்</th><th>மொத்தம்</th><th>ஆண்</th><th>பெண்</th><th>மொத்தம்</th></tr>
<tr><td>1</td><td>ஜுன்</td><td>48</td><td>42</td><td>90</td><td>14</td><td>6</td><td>20</td><td>0</td><td>0</td><td>0</td></tr>
</table>

</td><td>பதிவுகள் ஏற்று அங்கீகரிக்கப் பட்டது.</td></tr>
<tr><td>28.07.22</td><td>104</td><td>

**பொருள் எண். 02**

களக்காடு நகராட்சியில் அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டிடம் கட்டுதல் பணிக்கு நிர்வாக அனுமதி வரப்பட்டது மன்றத்தின் தகவலுக்கும், பார்வைக்கும்.

அலுவலகக்குறிப்பு :

**தமிழ்நாடு சட்டன்ற அறிவிப்புகள் 2022–2023ன்** கீழ் களக்காடு நகராட்சி அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டிடம் கட்டுதல் பணி செய்ய சென்னை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். 7628/2022/MA1, நாள். 08.06.2022ன்படி ரூ. 50.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வரப்பட்டுள்ளது.

</td><td>பார்வையிட்டு அங்கீகரிக்கப் பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td>28.07.22</td>
<td>105</td>
<td>
<u>பொருள் எண். 03</u><br>
களக்காடு நகராட்சி பகுதியில் நமக்கு நாமே திட்டத்தில் பொதுமக்கள் பங்களிப்பு தொகையுடன் பணிகள் செய்ய நிர்வாக அனுமதி வரப்பட்டது மன்றத்தின் தகவலுக்கு.<br><br>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
களக்காடு நகராட்சி பகுதியில் நமக்கு நாமே திட்டம் 2021-2022ன் கீழ் பொதுமக்கள் பங்களிப்பு தொகையுடன் கீழ்கண்ட பணிகள் செய்ய சென்னை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். 27519-43/2021/P2, நாள். 16.06.2022ன்படி நிர்வாக அனுமதி வரப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)</th><th>பங்களிப்பு தொகை (ரூ. இலட்சத்தில்)</th><th>அரசு நிதி ஒதுக்கீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>களக்காடு நகராட்சி தெரு எண். 171025S116-சிதம்பராபுரம் பாண்டியாபுரம் வடக்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.</td><td>6.60</td><td>2.20</td><td>4.40</td></tr>
<tr><td>2.</td><td>களக்காடு நகராட்சி தெரு எண். 171019R239 - வியாசராஜபுரம் அண்ணாசாலை தெருவில் பேவர் பிளாக் சாலை மற்றும் வாறுகால் அமைத்தல்.</td><td>6.00</td><td>3.00</td><td>3.00</td></tr>
<tr><td>3.</td><td>களக்காடு நகராட்சி தெரு எண். 171002R028-வார்டு எண். 2, மஞ்சுவிளை தெற்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.</td><td>8.00</td><td>4.00</td><td>4.00</td></tr>
</table>
</td>
<td>பார்வையிட்டு அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>28.07.22</td>
<td>106</td>
<td>
<u>பொருள் எண். 04</u><br>
களக்காடு நகராட்சியில் பேருந்து நிலையம் ரூ. 2.00 கோடி மதிப்பீட்டில் புதுப்பித்து அமைக்க பிரேரணை நிர்வாக அனுமதி வேண்டி அனுப்பப்பட்டுள்ளது மன்றத்தின் தகவலுக்கு.<br><br>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
களக்காடு நகராட்சி வார்டு எண். 19ல், அமைந்துள்ள பேருந்து நிலையமானது மிகவும் சிதலமடைந்து உள்ளதால், மேற்படி பேருந்து நிலையத்தினை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023ன் கீழ் புனரமைப்பு செய்வதற்கு நிர்வாக அனுமதி வேண்டி பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.
</td>
<td>பதிவினை ஏற்று அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>28.07.22</td>
<td>107</td>
<td>
<u>பொருள் எண். 05</u><br><br>
களக்காடு நகராட்சியில் 2020–2021ம் ஆண்டில் சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ் டூபிட்கோ நிறுவனத்தின் மூலம் கடன் பெற்று பணிகள் செய்ய பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். 10310/2020/ஆ5, நாள்.15.12.2020ன்படி கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற்று மற்றும் சென்னை பேரூராட்சிகள் இயக்குநர் அலுவலக கண்காணிப்பு பொறியாளர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 10310/2020/ஆ5, நாள். 15.12.2020ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், 06.01.2021ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு 02.01.2021ல் வேலைக்கான உத்தரவு வழங்கப்பட்டது.<br><br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>களக்காடு பேரூராட்சி பகுதி மூங்கிலடி ரோடு சுந்தர விநாயகர் கோவில் முதல் சிவபுரம் விலக்கு சாலை வரை தார்சாலை அமைத்தல் மற்றும் நான்குனேரியான் கால்வாயில் பாலம் அமைத்தல்.</td><td>200.00</td></tr>
<tr><td>2.</td><td>களக்காடு பேரூராட்சி பகுதி வடமனேரி கால்வாய் சாலை தார்சாலை மற்றும் தடுப்புசுவர் அமைத்தல்.</td><td>150.00</td></tr>
</table>
<br>
மேற்கண்ட பணிகளுக்கான மொத்த தொகை ரூ. 350.00 இலட்சம் ஆகும். மேலும் டூபிட்கோ கடன் உதவி திட்டத்தின் மூலம் முதல் தவணை கடன் தொகை ரூ. 175.00 இலட்சம் 30.04.2021ல் பெறப்பட்டுள்ளது. இரண்டாவது தவணை தொகை ரூ. 175.00 இலட்சம் விடுவிக்கப்படவில்லை. ஆனால் பணிகள் இரண்டும் முடிவுற்றுவிட்டதால் ஒப்பந்ததாரருக்கு தமிழ்நாடு நகர்ப்புற நிதி முதலீட்டு வளர்ச்சி ஆணையம் மூலம் முதல் தவணை தொகை ரூ. 175.00 இலட்சமும் மற்றும் பேரூராட்சியாக இருந்தபோது பேரூராட்சி பொதுநிதி கணக்கின் மூலம் ரூ. 175.00 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி விடுவிக்கப்பட்ட முதல் தவணைத் தொகைக்கு (ரூ. 175.00 இலட்சம்) மட்டும் கடன் தொகை திருப்பி செலுத்தப்படும் எனவும், இரண்டாவது தவணை தொகையை இந்நகராட்சிக்கு விடுவிக்கப்பட வேண்டாம் என இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 146/2020, நாள். 10.05.2022ன்படி அனுப்பப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும்.
</td>
<td>பதிவினை ஏற்று அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>28.07.22</td>
<td>108</td>
<td>
<u>பொருள் எண். 06</u><br><br>
களக்காடு நகராட்சி சிதம்பரபுரம் இளவடியான் கால்வாய் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து வார்டு எண். 23, 24 மற்றும் 25 ஆகிய வார்டுகளுக்கு குடிநீர் சீராக வழங்க நீர் ஆதாரத்தின் அளவினை அறிய சோதனை ஆழ்குழாய் கிணறு அமைத்திட நகராட்சி பொறியாளர் மூலம் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும்.
</td>
<td>அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | **<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>சிதம்பராபுரம் பகுதியில் சீராக குடிநீர் வழங்கவும், நகராட்சி மூலம் சொந்த குடிநீர் ஆதாரம் ஏற்படுத்தவும், நகராட்சி பொறியாளர் மூலம் சோதனை ஆழ்குழாய் கிணறு (Test Bore Well) அமைக்கவும் அதற்கான செலவினத்தினை நகராட்சி குடிநீர் திட்ட கணக்கிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 28.07.22 | 109 | **<u>பொருள் எண். 07</u>**<br>களக்காடு நகராட்சி வருவாய் நிதி கணக்கிலிருந்து குடிநீர் திட்ட கணக்கிற்கு ரூ. 25.00 இலட்சம் நிதி மாற்றம் செய்தல் தொடர்பாக மன்றம் பரிசீலனை செய்தல்.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து பராமரிப்பு கட்டணம் நிலுவையாக உள்ள 02/2022 மாதம் முதல் 06/2022ம் மாதம் முடிய ரூ. 25.05 இலட்சம் கேட்பு வரப்பட்டதால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ரூ. 25.05 இலட்சம் பராமரிப்பு கட்டணம் செலுத்த வேண்டியுள்ளதால், குடிநீர் திட்ட கணக்கில் இருப்பு ஏதுமில்லாததால், குடிநீர் திட்ட கணக்கிற்கு வருவாய் நிதி கணக்கிலிருந்து நிதி மாற்றம் செய்து தொகை வழங்க அனுமதிக்கலாம். | அனுமதித்து அங்கீகரிக்கப் பட்டது. |
| 28.07.22 | 110 | **<u>பொருள் எண். 08</u>**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட சேனையர் வீதி குடிதாங்கிகுளம் பகுதியில் பல்நோக்கு கட்டிடம் திருநெல்வேலி பாராளுமன்று உறுப்பினர் திரு. ஞானதிரவியம், எம்.பி., அவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாடு திட்ட நிதியில் ரூ. 6.50 இலட்சம் மதிப்பீட்டில் செய்ய வரப்பட்டது. கட்டிடம் அமைக்க தேர்வு செய்யப்பட்ட இடம் நீர்நிலை சார்ந்த இடமாக உள்ளதால் மாற்று இடம் தேர்வு செய்தல் தொடர்பாக மன்றம் பரிசீலனை செய்தல்.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட படலையார்குளம் வருவாய் கிராம சர்வே எண். 690/17ற்குட்பட்ட பகுதியில் பல்நோக்கு மைய கட்டிடம் அமைக்கவும், மேற்படி இடம் வருவாய் நிலை உடமை ஆவணப்படி களக்காடு ஊராட்சி ஒன்றியத்திற்கு கைப்பற்று மற்றும் அனுபோக தாரராக உள்ளதால் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண். ந7/35828/19, நாள். 22.10.2021ன்படி ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் உள்ள சம்பந்தப்பட்ட உள்ளாட்சி காலிமனைகளினை எல்கைப் பகுதிகளின் வரம்பிற்குள் வரும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியில் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சர்வே எண். 690/17ற்குட்பட்ட காலிமனையில் கட்டுமான பகுதிகள் நீங்கலாக மீதமுள்ள காலிமனையினை பொதுமக்களின் பொதுப்பயன்பாடு கட்டிடமான பல்நோக்கு மைய கட்டிடம் அமைக்க காலிமனையினை ஒப்படைக்க கோரலாம். | பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பல்நோக்கு மைய கட்டிடம் கட்டுவதற்கு களக்காடு நகராட்சி பகுதியில் உள்ள படலையார்குளம் வருவாய் கிராமம் புல எண். 690/17ல் களக்காடு ஊராட்சி ஒன்றியத்தின் பயன்பாட்டில் உள்ள காலி இடத்தை வழங்கிட கேட்டு தீர்மானிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 28.07.22 | 111 | **<u>பொருள் எண். 09</u>**<br>நாங்குனேரி சட்டமன்ற உறுப்பினர் திரு. ரூபி.R. மனோகரன், எம்.எல்.ஏ., அவர்களின் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் களக்காடு அரசு மேல்நிலைப்பள்ளியில் டெஸ்க் மற்றும் பெஞ்ச் 100 எண்ணம் ரூ. 13.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க வரப்பட்டதின்படி மேற்படி பொருட்களினை கொள்முதல் செய்ய பணி மேலாளர், டான்சி சிட்கோ தொழிற்பேட்டை, கப்பலூர், மதுரை – 08 என்ற நிறுவனத்திற்கு 50% முன்பணத்தினை குறுக்கு கோடிட்ட காசோலை வழி டான்சி பர்னிச்சர் ஒர்க்ஸ், மதுரை – 08 நிறுவனத்திற்கு வழங்க மன்றம் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதி பணி முடிவுற்ற பின்பு தொகை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகம் மூலம் வழங்கப்படும் என்பதால் திட்டத்தின் முன்னுரிமை கருதி களக்காடு நகராட்சி வருவாய் நிதி கணக்கிலிருந்து ரூ. 5.00 இலட்சம் டான்சி நிறுவனத்திற்கு முன்பணமாக வழங்கி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்திலிருந்து நிதி வரப்பட்டவுடன் ஈடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதித்து அங்கீகரிக்கப் பட்டது. |
| 28.07.22 | 112 | **<u>பொருள் எண். 10</u>**<br>களக்காடு நகராட்சியில் ஈப்பு வாகனங்கள் வாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது மன்றத்தின் தகவலுக்கு.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>களக்காடு நகராட்சியில் நகர்மன்ற தலைவர் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக ஒரு ஸ்கார்பியோ ஈப்பு வாகனம் ரூ. 16,82,000/– இலட்சம் மதிப்பீட்டிலும், நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அலுவலகப் பயன்பாட்டிற்கு புதியதாக இரண்டு பொலிரோ (Bolero) ஈப்பு வாகனம் ஒவ்வொன்றும் ரூ. 8,27,742/– இலட்சம் மதிப்பீட்டிலும் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட (GEM Rate) விலைக்கு மிகாமல் விதிகளுக்குட்பட்டு, மூன்று எண்ணம் ஈப்பு வாகனங்கள் வாங்க சென்னை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். 10327/2022/எம்3, நாள். 17.05.2022ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஈப்பு வாகனங்களை (மூன்று) வாங்குவதற்கு பொதுநிதியில் இருந்து செலவினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | பதிவின்படி பார்வையிடப் பட்டது. |
| 28.07.22 | 113 | **<u>பொருள் எண். 11</u>**<br>களக்காடு நகராட்சி கீழப்பத்தை வடக்கு தெரு மற்றும் பெருமாள் கோவில் தெரு ஆகிய தெருக்களில் உள்ள அங்கன்வாடி மையங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய வேண்டி வரப்பட்டுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு. | அனுமதித்து அங்கீகரிக்கப் பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
களக்காடு நகராட்சி பகுதிகளில் இயங்கும் கீழ்கண்ட அங்கன்வாடி மையங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை குழந்தைகளின் நலன் கருதி உடனடியாக சரி செய்வதற்கு திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 2159/2022/ஆ3, நாள். 04.07.2022ன்படி கடிதம் வரப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>அங்கன்வாடி மையத்தின் பெயர்</th><th>பழுதின் விவரம்</th></tr>
<tr><td>1.</td><td>கீழப்பத்தை வடக்கு</td><td>தரை மற்றும் சமையலறை பழுது</td></tr>
<tr><td>2.</td><td>பெருமாள் கோவில் தெரு</td><td>தரை பழுது</td></tr>
</table>
மேற்படி அங்கன்வாடி மையங்களில் உள்ள குறைபாடுகளை சரி செய்ய உரிய மதிப்பீடு தயார் செய்து நகராட்சி வருவாய் நிதி செலவினக் கணக்கிலிருந்து தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>28.07.22</td>
<td>114</td>
<td>
<u>பொருள் எண். 12</u><br>
களக்காடு நகராட்சி பகுதியில் சமுதாய மற்றும் பொதுக் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது மன்றத்தின் தகவலுக்கு.<br><br>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
களக்காடு நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0ன் கீழ் 2022–2023ம் ஆண்டிற்கு கீழக்கருவேலன்குளம் சர்வே எண். 77ல் ரூ. 19.28 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுவதற்கும் மற்றும் கோட்டை அந்தோணியார் தெரு சர்வே எண். 1432ல் ரூ. 31.28 இலட்சம் மதிப்பீட்டில் பொதுக் கழிப்பிடம் கட்டுவதற்கும் சென்னை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 18856/2022/தூஇதி2, நாள். 13.07.2022ன்படி அனுமதி வரப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>28.07.22</td>
<td>115</td>
<td>
<u>பொருள் எண். 13</u><br>
களக்காடு நகராட்சியில் 2022–2023 ஆம் ஆண்டுக்கு ஒப்பந்தக்காரராக புதிதாக பதிவு செய்ய திரு. ஜெ.ஜான்சன்துரை, த/பெ. ஜெயபால்சிங், 218/4, ஆர்ச் விளை தெரு, மாவடி – 627 107 என்பவரின் சொத்து மதிப்பீட்டின் அப்படையில் முதல் வகுப்பு ஒப்பந்தக்காரராக பதிவு செய்து தர கேட்டு வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br><br>
திரு. ஜான்சன்துரை என்பவர் களக்காடு நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பதிவு செய்வதற்கு அன்னாரது சொத்து விபரத்திற்கு, வட்டாட்சியர், பாளையங்கோட்டை அவர்களிடமிருந்து ரூ. 80.00 இலட்சத்திற்கான செல்வ நிலை சான்று (சான்று எண். TN–1720220707117, நாள். 21.07.2022)
</td>
<td>பதிவு செய்ய அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>பெற்றுள்ளார். சொத்து மதிப்பீட்டின் அடிப்படையில் முதல் வகுப்பு ஒப்பந்தக்காரராக பதிவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>28.07.22</td>
<td>116</td>
<td><u>பொருள் எண். 14</u><br><br>களக்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் பொது சுகாதாரம் பயன்பாட்டுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களான டிப்பர் லாரி (TN72Q7238) மற்றும் விலங்குகள் பிறப்பு கட்டுப்பாட்டு வாகனம் (TN72AV3639) ஆகிய வாகனங்களுக்கு ஆய்வாளர் வாகன போக்குவரத்து அலுவலகம், வள்ளியூர் அவர்களின் தகுதி சான்று பெறுவதற்கும், திடக்கழிவு மேலாண்மை பணிகளை முழுமையாக செய்திடவும், வாகனங்களில் உள்ள பழுதுகளை நீக்க கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும். மேலும் அதற்காகும் செலவினை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>வாகன விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை</th><th>கூடுதல் / குறைவு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">TN72Q7 238</td><td>ஸ்ரீ விநாயகா மோட்டார் ஒர்க்ஸ், அம்பை.</td><td>89165.00</td><td>குறைவு</td></tr>
<tr><td>சுந்தரம் மோட்டார்ஸ், திருநெல்வேலி.</td><td>93605.00</td><td>கூடுதல்</td></tr>
<tr><td rowspan="2">2.</td><td rowspan="2">TN72AV 3639</td><td>ஸ்ரீ விநாயகா மோட்டார் ஒர்க்ஸ், அம்பை.</td><td>66770.00</td><td>குறைவு</td></tr>
<tr><td>சுந்தரம் மோட்டார்ஸ், திருநெல்வேலி.</td><td>70070.00</td><td>கூடுதல்</td></tr>
</table>
<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br><br>திடக்கழிவு மேலாண்மை மற்றும் பொது சுகாதாரம் நலன் கருதி மோட்டார் வாகன தகுதி சான்று பெறுவதற்காகவும், வாகனங்களின் பழுதுகளை நீக்கம் செய்வதற்கு அரசின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் இருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று, குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ விநாயகா மோட்டார் ஒர்க்ஸ், அம்பை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.</td>
<td>ஸ்ரீ விநாயகா மோட்டார் ஒர்க்ஸ், அம்பை நிறுவனத்தின் குறைந்த கொட்டேசன் அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 28.07.22 | 117 | **<u>பொருள் எண். 15</u>**<br><br>களக்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை வீடுகள் தோறும் சென்று தள்ளுவண்டிகள் மூலம் சேகரம் செய்யப்பட்டு வருகிறது. இதில் 50 லிட்டர் கொள்ளளவு கொண்ட பிளாஸ்டிக் தொட்டிகள் நான்கு எண்ணம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள பிளாஸ்டிக் தொட்டிகள் உடைந்து சிதலமடைந்து உள்ளதால் குப்பைகளை பிரித்து வாங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. திடக்கழிவு மேலாண்மை பணிகளில் தாமதல் ஏற்படாமல் இருப்பதற்காக தேவையான பிளாஸ்டிக் தொட்டிகள் வாங்குவதற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும். மேலும் அதற்காகும் செலவினை நகராட்சி வருவாய் செலவின கணக்கு நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>(அட்டவணை கீழே)<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் வீடுகள் தோறும் சென்று தள்ளுவண்டிகளில் குப்பைகளை சேகரிக்க பயன்படுத்தப்பட்டு வரும் பிளாஸ்டிக் தொட்டிகளை உள்ளூர் விலை விகிதத்திற்குட்பட்டு வாங்குவதற்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மகாராஜன் கெமிக்கல்ஸ், களக்காடு என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம். | மகாராஜன் கெமிக்கல்ஸ், களக்காடு என்ற நிறுவனத்தின் குறைந்த நிரக்கு அங்கீகரிக்கப் பட்டது. |

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்தின் பெயர் | தொகை | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1. | மகாராஜன் கெமிக்கல்ஸ், களக்காடு. | 840.00 | குறைவு |
| 2. | சுரேஷ் கெமிக்கல்ஸ், களக்காடு. | 930.00 | கூடுதல் |
| 3. | ஷியாமலா கெமிக்கல்ஸ், திருநெல்வேலி. | 950.00 | கூடுதல் |

| | | | |
|---|---|---|---|
| 28.07.22 | 118 | **<u>பொருள் எண். 16</u>**<br><br>களக்காடு நகராட்சியில் பொது மக்களின் குடிநீர் தேவைக்காக பயன்படுத்தப்பட்டு வரும் சின்டெக்ஸ் டேங்கில் உள்ள மின் மோட்டார்கள், பொது கழிப்பிடங்களில் பயன்படுத்தப்பட்டு வரும் மின் மோட்டார்கள் மற்றும் நகராட்சி நீரேற்று நிலையங்களில் உள்ள மின் மோட்டார்களை பொதுமக்களின் குடிநீர் அவசியத்தை கருத்தில் கொண்டு உடனுக்குடன் நகராட்சியின் ஒப்பந்ததாரர்களை கொண்டு கீழக்கண்ட இடங்களில் உள்ள மின் மோட்டார்கள் சரி செய்யப்பட்டுள்ளது. அதன் விலைப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு. மேலும் அதற்காகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அங்கீகரிக்கப் பட்டது. |

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மின் மோட்டார் பழுது நீக்கம் செய்யப்பட்ட இடம் | தொகை |
|---|---|---|---|
| 1. | சி.வி.என். எலக்ட்ரிக்கல்ஸ் பிளம்பிங் & மோட்டார் ரீவைண்டிங் ஒர்க்ஸ், பணகுடி. | வடகரை பம்பிங் நிலையம் 10HP மின்மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 30050.00 |
| 2. | | பச்சேந்திரம் சின்டெக்ஸ் டேங்க் மின்மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 9750.00 |
| 3. | | அஞ்சுகிராமம் சின்டெக்ஸ் டேங்க் மின் மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 8745.00 |
| 4. | | வார்டு எண். 6, தென்கரை சின்டெக்ஸ் டேங்க் மின் மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 9625.00 |
| 5. | | வார்டு எண். 11, பெருமாள் கோவில் முன்பு சின்டெக்ஸ் டேங்க் மின் மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 8305.00 |
| 6. | | வார்டு எண். 10, சிவசண்முகபுரம் மகளிர் சுகாதார வளாகம் கம்ப்ரசர் பழுது நீக்கம் செய்தல். | 10156.00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 7. | சி.வி.என். எலக்ட்ரிக்கல்ஸ் பிளம்பிங் & மோட்டார் ரீவைண்டிங் ஒர்க்ஸ், பணகுடி. | வார்டு எண். 4, கீழப்பத்தை அங்கன்வாடி சின்டெக்ஸ் டேங்க் மின் மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 9745.00 | | |
| | | 8. | | வார்டு எண். 9, சிங்கம்பத்து இந்திரா காலனி சின்டெக்ஸ் டேங்கில் உள்ள கம்ப்ரசர் பழுது நீக்கம் செய்தல். | 10730.00 | | |
| | | 9. | | வார்டு எண். 8, தம்பிதோப்பு நாராயணசாமி கோவில் அருகில் உள்ள சின்டெக்ஸ் டேங்க் மின்மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 8885.00 | | |
| | | 10. | ஏ.பி.சிங். எலக்ட்ரிக்கல்ஸ், களக்காடு. | வார்டு எண். 18, கோட்டை விஸ்வகர்மா தெரு சின்டெக்ஸ் டேங்க் புதிய மின் மோட்டார் பொருத்துதல். | 21415.00 | | |
| | | 11. | | வார்டு எண். 26, கோவில்பத்து செட்டியார் தெரு சின்டெக்ஸ் டேங்கில் உள்ள கம்ப்ரசர் பழுது நீக்கம் செய்தல். | 9580.00 | | |
| | | 12. | | வார்டு எண். 21, கோவில்பத்து வடக்கு தெரு சின்டெக்ஸ் டேங்கில் உள்ள கம்ப்ரசர் பழுது நீக்கம் செய்தல். | 9030.00 | | |
| | | 13. | | வார்டு எண். 14, மூங்கிலடி பரமேஸ்வரபுரம் கிணற்றில் உள்ள மின்மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 8975.00 | | |
| | | 14. | | வார்டு எண். 13, கப்பலோட்டிய தமிழன் வடக்கு தெரு சின்டெக்ஸ் டேங்க் மின் மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 9370.00 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 15. | ஏ.பி.சிங். எலக்ட்ரிக்கல்ஸ், களக்காடு. | வார்டு எண். 25, சவேரியார் தெரு சின்டெக்ஸ் டேங்க் மின் மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 9960.00 | |
| | | 16. | | வார்டு எண். 13, கக்கன் நகர் மேலத்தெரு சின்டெக்ஸ் டேங்க் மின் மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 9720.00 | |
| | | 17. | | வார்டு எண். 24, தேவேந்திரன் தெரு சின்டெக்ஸ் டேங்க் மின் மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 9525.00 | |
| | | 18. | | வார்டு எண். 13, கக்கன்நகர் முப்பிடாதி அம்மன் கோவில் அருகில் உள்ள சின்டெக்ஸ் டேங்க் மின் மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 19185.00 | |
| | | 19. | | வார்டு எண். 17, காந்தி வீதி சின்டெக்ஸ் டேங்க் மின் மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 2070.00 | |
| | | 20. | | வார்டு எண். 21, கோவில்பத்து ஆற்றங்கரை தெரு சின்டெக்ஸ் டேங்கில் உள்ள கம்ப்ரசர் பழுது நீக்கம் செய்தல். | 8880.00 | |

**அலுவலகக்குறிப்பு :**

நகராட்சியில் பொதுமக்களின் குடிநீர் தேவையினை உடனுக்குடன் நகராட்சியில் ஒப்பந்தம் பெற்றுள்ள நிறுவனங்களை கொண்டு சரி செய்து கொடுத்த வ.எண். 1 முதல் 9 வரையிலான வேலைகளுக்கு தொகை ரூ. 105991/–ஐ சி.வி.என். எலக்ட்ரிக்கல்ஸ் பிளம்பிங் & மோட்டார் ரீவைண்டிங் ஒர்க்ஸ், பணகுடி திரு. ஞானக்கதிரவன் என்பவருக்கும் மற்றும் வ.எண். 10 முதல் 20 வரையிலான வேலைகளுக்கு தொகை ரூ. 117710/–ஐ ஏ.பி.சிங். எலக்ட்ரிக்கல்ஸ், களக்காடு திரு. ராமகிருஷ்ணன் என்பவர்களின் பில்பட்டியலினை நகராட்சி பணி மேற்பார்வையாளர் மூலம் பார்வையிட்டு பணி முடிவு சான்று வழங்கப்பட்டுள்ளதால் தொகை வழங்க மன்றம் பரிசீலிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 28.07.22 | 119 | **பொருள் எண். 17**<br>களக்காடு நகராட்சியில் 2022–2023 ஆம் ஆண்டுக்கு குடிநீர் பராமரிப்பிற்கு மூன்று மாதத்திற்கு தேவையான உதிரி பாகங்களை நகராட்சியில் வருடாந்திர ஒப்பந்தம் கொடுத்துள்ள ஈஸ்வரி எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அதற்காகும் செலவு தொகையினை நகராட்சியின் குடிநீர் திட்ட கணக்கிலிருந்து தொகை வழங்கவும், வாங்கப்பட்ட உதிரி பாகங்களின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும். | ஈஸ்வரி எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்திற்கு பில் பட்டியல் படியான தொகை வழங்க அங்கீகரிக்கப் பட்டது. |

| வ. எண். | உதிரிபாகங்கள் விபரம் | எண்ணிக்கை | விலை | தொகை |
|---|---|---|---|---|
| 1. | 5" PVC FTA | 6 | 135 | 810 |
| 2. | 5" PVC MTA | 6 | 135 | 810 |
| 3. | 5" PVC Tee | 6 | 456 | 2736 |
| 4. | 4" PVC Bend | 6 | 173 | 1038 |
| 5. | 4" PVC Tee | 4 | 256 | 1024 |
| 6. | 4" PVC Elbow | 12 | 146 | 1752 |
| 7. | 3" PVC Elbow | 24 | 99 | 2376 |
| 8. | 3" PVC FTA | 12 | 54 | 648 |
| 9. | 3" PVC MTA | 12 | 54 | 648 |
| 10. | 3" PVC Tee | 6 | 144 | 864 |
| 11. | 3" PVC Bend | 12 | 102 | 1224 |
| 12. | 2" PVC Tee | 6 | 66 | 396 |
| 13. | 2" PVC Elbow | 12 | 44 | 528 |
| 14. | 2" PVC Bend | 12 | 40 | 480 |
| 15. | 2" PVC FTA | 6 | 22 | 132 |
| 16. | 2" PVC MTA | 6 | 22 | 132 |
| 17. | $1^{1/4}$ G.I. Gate Valve | 6 | 941 | 5646 |
| 18. | 3/4" Gate Valve | 12 | 536 | 6432 |
| 19. | 3/4" Coupling | 50 | 24 | 1200 |
| 20. | 3/4" G.I. Elbow | 50 | 34 | 1700 |
| 21. | 3/4" PVC Coupling | 24 | 3 | 72 |
| 22. | 3/4" PVC Elbow | 24 | 5 | 120 |
| 23. | 3/4" PVC MTA | 24 | 5 | 120 |
| 24. | 3/4" PVC FTA | 24 | 5 | 120 |
| 25. | 1/2" G.I. Nalli | 50 | 215 | 10750 |
| 26. | Solvent Cement | 12 | 590 | 7080 |
| 27. | 6" C.I.D. Joint | 22 | 875 | 19250 |

| | | | | |
|---|---|---|---|---|
| 28. | 3/4" PVC Tee | 10 | 5 | 50 |
| 29. | 3/4 x 24 Pipe Nipple | 12 | 190 | 2280 |
| 30. | 3/4 x 12 Pipe Nipple | 12 | 120 | 1440 |
| 31. | 3/4 x 9 Pipe Nipple | 12 | 85 | 1020 |
| 32. | 3/4 x 6 Pipe Nipple | 12 | 72 | 864 |
| 33. | 6 x 5 PVC Reducer | 4 | 96 | 384 |
| 34. | 5 x 4 PVC Reducer | 4 | 52 | 208 |
| 35. | 4 x 3 PVC Reducer | 6 | 33 | 198 |
| 36. | 3 x 2 PVC Reducer | 6 | 26 | 156 |
| 37. | 5" C.I.D. Joint | 4 | 683 | 2732 |
| 38. | 4" C.I.D. Joint | 4 | 542 | 2168 |
| 39. | Rubber Rings | 40 | 60 | 2400 |
| 40. | 6x1/2" Bolt Nut | 200 | 28 | 5600 |
| 41. | 1 H.P. Single Phase Sub Motor Pump Set (15x90H) | 4 | 24432 | 97728 |
| 42. | 1" G.M. Gate Valve | 6 | 722 | 4332 |
| 43. | 5" S.V.Blancher | 6 | 520 | 3120 |
| 44. | 4" Sluice Valve Blancher | 6 | 475 | 2850 |
| 45. | 3" Sluice Valve Blancher | 6 | 435 | 2610 |
| 46. | 2" Valve | 6 | 262 | 1572 |
| 47. | 5" Nipple | 8 | 434 | 3472 |
| 48. | 4" Nipple | 8 | 407 | 3256 |
| 49. | 3" Nipple | 8 | 274 | 2192 |
| 50. | 2" Nipple | 8 | 114 | 912 |
| 51. | Mark II Pump 1/2" Rod | 24 | 350 | 12600 |
| 52. | Mark III Pump 1/4" Pipe '10' | 36 | 1050 | 37800 |
| 53. | 1/4" G.I. Coupling | 36 | 58 | 2088 |
| 54. | 1/2 x 1/2 Bolt Nut | 120 | 12 | 1440 |
| 55. | 1 HP Sub Penal Bond | 4 | 5883 | 23532 |
| 56. | 6" PVC 4 KSC Pipe | 30 | 400 | 12000 |
| **மொத்தம்** | | | | **299092** |

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

நகராட்சியில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகிக்க 19 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் நீரேற்றம் செய்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நீரேற்றும் குழாய்கள், குடிநீர் விநியோகிக்கும் குழாய்களில் ஏற்படும் பழுதுகள், பொது நல்லிகள் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் போன்றவற்றிற்கு மூன்று மாதத்திற்கு தேவையான உதிரி

| | | | |
|---|---|---|---|
| | | பாகங்கள் வாங்கப்பட்டுள்ளது. பொருட்கள் யாவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விலை நிரக்கிற்குட்பட்டுள்ளதின்படி, நகராட்சி பணி மேற்பார்வையாளர் மூலம் பில் பட்டியலில் சான்று பெறப்பட்டதின்படி தொகை வழங்க மன்றம் பரிசீலிக்கலாம். | |
| 28.07.22 | 120 | **பொருள் எண். 18**<br>களக்காடு நகராட்சி வார்டு எண். 8, மேலக்கருவேலன்குளம் சிவருத்திரர் தெருவில் கழிவுநீர் ஓடை இல்லாததால் கழிவுநீர் சாலைகளில் செல்கிறது. இதனால் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது எனவும், அதில் தற்காலிகமாக PVC பைப் சாலையின் ஓரமாக பதித்து கொடுக்க வார்டு உறுப்பினர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும்.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>நகராட்சி சுகாதார ஆய்வாளர் அவர்களின் அறிக்கையின்படி, பொதுமக்களின் பொதுசுகாதார அவசர அவசியத்தினை முன்னிட்டு, பணி மேற்பார்வையாளரின் தல ஆய்வு அறிக்கைப்படி, பணி செய்ய மன்றம் பரிசீலிக்கலாம். | அங்கீகரிக்கப் பட்டது. |
| 28.07.22 | 121 | **பொருள் எண். 19**<br>களக்காடு நகராட்சி வார்டு எண். 20, கண்ணார் கோவில் கீழத்தெருவில் உள்ள பழுதான சின்டெக்ஸ் டேங்கை மாற்றிடவும், அதிலிருந்து பைப்லைன் பதித்து தெருவில் இரண்டு நல்லிகள் வைத்து தர கேட்டு வார்டு உறுப்பினர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>நகராட்சி சுகாதார ஆய்வாளர் அவர்களின் அறிக்கையின்படி, பொதுமக்களின் பொதுசுகாதார அவசர அவசியத்தினை முன்னிட்டு, பணி மேற்பார்வையாளரின் தல ஆய்வு அறிக்கைப்படி, பணி செய்ய மன்றம் பரிசீலிக்கலாம். | அங்கீகரிக்கப் பட்டது. |
| 28.07.22 | 122 | **பொருள் எண். 20**<br>களக்காடு நகராட்சி வார்டு எண். 7, கீழக்கருவேலன்குளம் பகுதியில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தரக் கேட்டு வரப்பெற்ற வார்டு உறுப்பினர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>2022–23ம் வருட நிதியாண்டில் நகராட்சி வருவாய் நிதி மற்றும் அரசின் திட்ட நிதிகளில் நிதி ஒதுக்கீட்டின்படி பணியின் முக்கியத்துவம் கருதி, முன்னுரிமைப்படி பணிகள் செய்ய மன்றம் பரிசீலிக்கலாம். | அங்கீகரிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 28.07.22 | 123 | **<u>பொருள் எண். 21</u>**<br>களக்காடு நகராட்சி வார்டு எண். 25, பாண்டியாபுரம் தெருவில் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு பயன்படுத்தி வரும் சின்டெக்ஸ் டேங்க் கட்டிடம் பழுதடைந்து இடிந்து விடும் நிலையில் உள்ளது. அதனை இடித்து அகற்றிவிட்டு அதே இடத்தில் புதிதாக சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தரக் கேட்டு வரப்பெற்ற வார்டு உறுப்பினர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>நகராட்சி சுகாதார ஆய்வாளர் அவர்களின் அறிக்கையின்படி, பொதுமக்களின் பொதுசுகாதார அவசர அவசியத்தினை முன்னிட்டு, பணி மேற்பார்வையாளரின் தல ஆய்வு அறிக்கைப்படி, பணி செய்ய மன்றம் பரிசீலிக்கலாம். | அங்கீகரிக்கப் பட்டது. |
| 28.07.22 | 124 | **<u>பொருள் எண். 22</u>**<br>களக்காடு நகராட்சி வார்டு எண். 13, கக்கன்நகரில் உள்ள ஆழ்குழாய் அடிபம்பு பிளாட்பார்ம் உடைந்தும், சாலை மட்டத்தை விட தாழ்வாகவும் உள்ளதால் தண்ணீர் எடுக்க சிரமமாக உள்ளதாகவும், மேற்படி பிளாட் பார்ம் மட்டத்தை உயர்த்தி தரவும் கேட்டு வரப்பெற்ற வார்டு உறுப்பினர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>நகராட்சி சுகாதார ஆய்வாளர் அவர்களின் அறிக்கையின்படி, பொதுமக்களின் பொதுசுகாதார அவசர அவசியத்தினை முன்னிட்டு, பணி மேற்பார்வையாளரின் தல ஆய்வு அறிக்கைப்படி, பணி செய்ய மன்றம் பரிசீலிக்கலாம். | அங்கீகரிக்கப் பட்டது. |
| 28.07.22 | 125 | **<u>பொருள் எண். 23</u>**<br>களக்காடு நகராட்சி வார்டு எண். 23, ராஜபுதூர் நாடார் தெருவில் உள்ள சாலை சிதலமடைந்து போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளதால் புதிதாக பேவர் பிளாக் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்து தரக் கேட்டு வரப்பட்ட கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>2022–23ம் வருட நிதியாண்டில் நகராட்சி வருவாய் நிதி மற்றும் அரசின் திட்ட நிதிகளில் நிதி ஒதுக்கீட்டின்படி பணியின் முக்கியத்துவம் கருதி, முன்னுரிமைப்படி பணிகள் செய்ய மன்றம் பரிசீலிக்கலாம். | அங்கீகரிக்கப் பட்டது. |

<table>
<tr>
<td>28.07.22</td>
<td>126</td>
<td>
<u>பொருள் எண். 24</u><br>
களக்காடு நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் வீடுகள் தோறும் சென்று மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் தனித்தனியாக பிரித்து நகராட்சியின் வளமீட்பு பூங்காவிற்கு எடுத்து சென்று மக்கும் குப்பைகள் உரமாக்கப்படுகிறது. உரமாக்கப்பட்ட மக்கிய குப்பைகளை கொண்டு மண்புழு உரம் தயாரிக்கப்படுகிறது. நகராட்சியில் தயாரிக்கப்படும் உரங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் விவசாய நிலங்களுக்கு பயன்படுத்த உகந்தது என்று வேளாண்மை துறையின் மூலம் சான்று வழங்கப்பட்டுள்ளது. எனவே, தயாரிக்கப்படும் உரங்களை விற்பனை செய்து கிடைக்கும் வருவாயை கொண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளுக்கு பயன்படுத்துவதற்காக விலை நிர்யணம் செய்து வசூலிக்க மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ.எண்.</th><th>விபரம்</th><th>கிலோ ஒன்றுக்கு தொகை (ரூபாயில்)</th></tr>
<tr><td>1.</td><td>மக்கிய குப்பை உரம்</td><td>3.00</td></tr>
<tr><td>2.</td><td>மண்புழு உரம்</td><td>5.00</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் சேகரிக்கப்படும் குப்பைகளை மக்க வைத்து உரமாக்கி விற்பனை செய்வதன் மூலம் இத்திட்டத்திற்கு அடிப்படையான சில வேலைகளை செய்வதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம். மக்கும் குப்பை உரங்களை விற்பனை செய்ய மன்றம் அங்கீகரித்து அனுமதிக்கலாம்.
</td>
<td>அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>28.07.22</td>
<td>127</td>
<td>
<u>பொருள் எண். 25</u><br>
களக்காடு நகராட்சி 26வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து கீழ்கண்ட பணிகள் செய்ய கடிதம் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு அங்கீகாரத்திற்கும்.
<table>
<tr><td>1.</td><td>களக்காடு கோவில்பத்து காவல் தெரு மற்றும் மேலக்கட்டளை தெருவிலுள்ள சார்பதிவாளர் அலவலகம் வரை இணைப்புத் தார்சாலை அமைத்தல்.</td></tr>
<tr><td>2.</td><td>காவல் தெருவில் பொதுக் கழிப்பிடம் அமைத்தல்.</td></tr>
<tr><td>3.</td><td>காவல் தெருவின் மேற்பகுதியில் வாறுகால் அமைத்தல்.</td></tr>
<tr><td>4.</td><td>கோவில்பத்து சமுதாய நலக்கூடத்தை திருமண மண்டபமாக தரம் உயர்த்தல்.</td></tr>
<tr><td>5.</td><td>கோவில்பத்து ஆற்றுப் பாலத்தை பராமரிப்பு செய்தல்.</td></tr>
<tr><td>6.</td><td>கோவில்பத்து கீழக்கட்டளைத் தெருவில் பேவர் பிளாக் சாலையாக மாற்றி அமைத்தல்.</td></tr>
</table>
</td>
<td>அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | 7. கோவில்பத்து யாதவர் வடக்கு தெருவில் புதிய பேவர் பிளாக் சாலை அமைத்தல்.<br>8. நகராட்சியில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.<br>9. நகராட்சியின் முக்கிய வீதிகளில் சிசிடிவி கேமரா அமைத்தல்.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>2022-23ம் வருட நிதியாண்டில் நகராட்சி வருவாய் நிதி மற்றும் அரசின் திட்ட நிதிகளில் நிதி ஒதுக்கீட்டின்படி பணியின் முக்கியத்துவம் கருதி, முன்னுரிமைப்படி பணிகள் செய்ய மன்றம் பரிசீலிக்கலாம். | |
| 28.07.22 | 128 | **<u>பொருள் எண். 26</u>**<br><br>களக்காடு நகராட்சியின் சிறு குடிநீர் திட்டங்களினை பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் தொடர்பாக பரிசீலனை செய்தல்.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>நகராட்சியில் 103 சிறு குடிநீர் திட்டங்கள் உள்ளன. பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் 16 எண்ணம் உள்ளன. இவற்றில் ஏற்படும் பைப்லைன் மற்றும் மோட்டார் பழுதுகளை நீக்கி நகராட்சி பொறியாளர் மூலம் மதிப்பீடு கோரி ஒப்பந்தப்புள்ளி வரவழைத்து குடிநீர் திட்ட கணக்கிலிருந்து பராமரிப்பு பணிக்கான செலவினம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | அங்கீகரிக்கப் பட்டது. |
| 28.07.22 | 129 | **<u>பொருள் எண். 27</u>**<br><br>களக்காடு நகராட்சியின் 2022-23ம் வருட பொது சுகாதார பராமரிப்பு பணிகளுக்கான பொது சுகாதார பராமரிப்பு பொருட்கள் கொள்முதல் செய்தல் தொடர்பாக மன்றம் பரிசீலித்தல்.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>2022-23ம் வருட நிதியாண்டில் பொது சுகாதார பராமரிப்பு வகைக்கு ரூ. 10.00 லட்சம் உத்தேச ஒதுக்கீடு செய்து தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | அங்கீகரிக்கப் பட்டது. |

<table>
<tr><td>28.07.22</td><td>130</td><td><u>பொருள் எண். 28</u><br><br>களக்காடு நகராட்சி 2022–23ம் வருடத்தில் நகராட்சி கணினி பயன்பாட்டிற்குரிய பிரதிகள் நகல் எடுக்க டோனர் கொள்முதல் செய்தல், மை நிரப்புதல், கணினி பராமரிப்பு பணி செய்ததற்கு தொகை வழங்குதல் தொடர்பாக மன்றம் பரிசீலனை செய்தல்.<br><br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>நகராட்சியில் அலுவல் பணிகக்கு பிரதிகள் நகல் எடுக்கவும், டோனர் வழங்குதல், கணினி பராமரிப்பு பணிகள் செய்யவும், டோனரில் மை நிரப்பித் தரவும் குறைந்த கொட்டேசன் வழங்கிய பிர்தோஸ் சிஸ்டம், களக்காடு என்ற நிறுவனத்திற்கு கீழ்கண்ட பில் பட்டியலின்படி தொகை வழங்க அனுமதிக்கலாம்.<br><br><table><tr><th>வ.எண்.</th><th>பில் பட்டியல் எண்.</th><th>தொகை ரூபாயில்</th></tr><tr><td>1.</td><td>1125/23.06.2022</td><td>9593</td></tr><tr><td>2.</td><td>2173/18.07.2022</td><td>6843</td></tr></table></td><td>அங்கீகரிக்கப் பட்டது.</td></tr>
<tr><td>28.07.22</td><td>131</td><td><u>பொருள் எண். 29</u><br><br>களக்காடு நகராட்சியின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் திட்டத்திற்கு மூன்று நீரேற்று நிலையங்கள் உள்ளது. இதிலிருந்து 19 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் நீரேற்றம் செய்து குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரில் ஆட்கள் மூலம் குளோரின் பவுடரை நீரில் கரைத்து குளோரினேஷன் செய்யப்படுகிறது. இதன் காரணமாக சரியான அளவில் குளோரின் செய்ய இயலவில்லை. அதனை மாற்றம் செய்து நீரேற்று நிலையத்தில் இயந்திரம் மூலம் திரவ குளோரினேஷன் செய்வதற்கும், அதற்காகும் செலவினை நகராட்சி வருவாய் நிதி கணக்கிலிருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.<br><br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>நகராட்சி பகுதியில் பருவநிலை மாற்றம் காரணமாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரில் குளோரினேஷன் செய்து வழங்க வேண்டியுள்ளதால், தற்போது ஆட்கள் மூலம் குளோரின் பவுடரை நீரில் கரைத்து குளோரினேஷன் செய்யப்படுகிறது. சரியான அளவில் குளோரினேஷன் செய்து கொடுப்பதற்கு நகராட்சியில் உள்ள நீரேற்றும் நிலையங்களில் கீழக்கருவேலன்குளம் (நான்குனேரி – திசையன்விளை கூட்டு குடிநீர் திட்டம்), சொந்த குடிநீர் ஆதாரம் (வடகரை நீரேற்றும் நிலையம்), பணகுடி – வடக்கு வள்ளியூர் கூட்டு குடிநீர் திட்டம் ஆகிய நீரேற்று நிலையத்தில் இயந்திரம் மூலம் திரவ குளோரினேஷன் செய்வதற்கு மதிப்பீடு பெற்று பணி செய்ய அனுமதிக்கலாம்.</td><td>அங்கீகரிக்கப் பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 28.07.22 | 132 | **<u>பொருள் எண். 30</u>**<br>2019–20ம் வருட மூலதன மானிய திட்டத்தின் கீழ், உதயமார்த்தாண்டன் தெரு, காவல் தெரு, மேலக்கட்டளை தெரு ஆகிய தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணிக்கு வரப்பட்ட ரூ. 19.00 லட்சத்திற்குரிய பில் பட்டியலினை வருவாய் நிதி செலவின கணக்கிலிருந்து திரு. T. ஜெயராஜ் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>2019–2020ம் வருட மூலதன மானிய திட்டத்தின் கீழ் ரூ. 4.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ. 3.78 கோடி அரசு மானியமாகவும், ரூ.0.42 பேரூராட்சி பங்குத் தொகையாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, ரூ. 20.00 லட்சம் நகராட்சி பொதுநிதியின் வருவாய் நிதி செலவின கணக்கிலிருந்து வழங்க அனுமதிக்கலாம். | அனுமதித்து அங்கீகரிக்கப் பட்டது. |
| 28.07.22 | 133 | **<u>பொருள் எண். 31</u>**<br>களக்காடு நகராட்சியில் 2019–2020 ஆம் ஆண்டு நபார்டு நிதி உதவித் திட்டத்தின் கீழ் சுபத்ரா பூங்கா முதல் பிள்ளையார் கோவில் முடிய மற்றும் அஞ்சுகிராமம் முதல் மூங்கிலடி வடக்கு தெரு வரை தார்சாலை பணி செய்வதற்கு திரு. M. மலையாண்டி பிரபு என்பவருக்கு வேலைக்கான உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பணியானது 21.09.2020 அன்றே பணி முடிவுற்று சென்னை இயக்குநரக கண்காணிப்பு பொறியாளர் அவர்களால் பணி முடிவு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. எனவே, ரூ. 6.00 லட்சத்திற்குரிய பில் பட்டியலின்படி தொகை வழங்க வேண்டியுள்ளது. நபார்டு நிதி உதவி திட்டத்தில் தொகை இருப்பில் இல்லாததால், நகராட்சி வருவாய் நிதி செலவின கணக்கிலிருந்து தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>2019–2020 ஆம் ஆண்டு நபார்டு நிதி உதவித் திட்டத்தின் கீழ் பணி செய்வதற்கு 27.12.2019 அன்று பணி உத்தரவு வழங்கி 21.09.2020 அன்று பணி முடிவுற்றது. மேற்படி பணிக்கு கண்காணிப்பு பொறியாளர் அவர்களால் 26.02.2022 அன்று பணி முடிவு சான்றின்படி, ரூ. 6.00 லட்சம் வழங்க வேண்டியுள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சி வருவாய் நிதி செலவின கணக்கிலிருந்து தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதித்து அங்கீகரிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 28.07.22 | 134 | **<u>பொருள் எண். 32</u>**<br>களக்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் வீடுகள், சாலையில் உள்ள குப்பைகளை சேகரம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்டு வரும் 6 வாகனங்களை தங்கம் ஆண்கள் சுய உதவிக்குழு மூலம் 6 நபர்களை கொண்டு இயக்கப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் சென்னை நகராட்சிகள் இயக்குநரின் அனுமதி பெறுவதற்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கும் வரை தொடர்ந்து வாகனங்களை இயக்கி வரும் பணியாளர்களுக்கு நகராட்சி வருவாய் நிதி செலவின கணக்கிலிருந்து தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>2022-2023ம் ஆண்டுக்கு பொது சுகாதார வாகனங்களை தங்கம் ஆண்கள் சுய உதவிக்குழு மூலம் 6 நபர்களை வைத்து இயக்குவதற்கு சென்னை நகராட்சிகள் இயக்குநரின் அனுமதி பெறுவதற்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கும் வரை தொடர்ந்து வாகனங்களை இயக்கி வரும் பணியாளர்களுக்கு தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | அங்கீகரிக்கப் பட்டது. |
| 28.07.22 | 135 | **<u>பொருள் எண். 33</u>**<br>களக்காடு நகராட்சியில் குடிநீர் திட்டத்தில் 19 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் பைப்லைன் பழுதுகளை சரிசெய்வதற்கும், மேலும் 2063 எண்ணம் தெருவிளக்குகளை பழுது நீக்கம் செய்து பராமரிப்பதற்கும் களந்தை சுய உதவிக்குழு மூலம் 20 நபர்களை கொண்டு பணி செய்யப்பட்டு வருகிறது. பணி செய்து வரும் பணியாளர்களை 2022-23ம் ஆண்டுக்கு பணி செய்வதற்கு சென்னை நகராட்சிகள் இயக்குநரின் அனுமதி பெறுவதற்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கும் வரை பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு நகராட்சி வருவாய் நிதி செலவின கணக்கிலிருந்து தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>2022-2023ம் ஆண்டுக்கு குடிநீர் திட்டம் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 2022-23ம் ஆண்டுக்கு பணி செய்வதற்கு சென்னை நகராட்சிகள் இயக்குநரின் அனுமதி பெறுவதற்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கும் வரை பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | அங்கீகரிக்கப் பட்டது. |

<table>
<tr>
<td>28.07.22</td>
<td>136</td>
<td>
<u>பொருள் எண். 34</u>
களக்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் பொது சுகாதாரம் பயன்பாட்டுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் அபே ஆட்டோ (TN72AZ5865) வாகனத்திற்கு ஆய்வாளர் வாகன போக்குவரத்து அலுவலகம், வள்ளியூர் அவர்களின் தகுதி சான்று பெறுவதற்கும், திடக்கழிவு மேலாண்மை பணிகளை முழுமையாக செய்திடவும், வாகனங்களில் உள்ள பழுதுகளை நீக்க அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து டெண்டர் பெற்று பணி ஆணை வழங்கி பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி தொகை ரூ. 59200/-ஐ நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.
<u>அலுவலகக்குறிப்பு :</u>
அரசு அங்கீகாரம் பெற்ற ஸ்ரீ விநாயகா மோட்டார் ஒர்க்ஸ், அம்பாசமுத்திரம் என்ற நிறுவனத்தின் மூலம் பொது சுகாதார வாகனம் அபே ஆட்டோ (TN72AZ5865) பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்திலிருந்து 16.05.2022ம் தேதி அன்று தொகை வழங்க கேட்டு பில் வரப்பட்டுள்ளது. அந்நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>தொகை வழங்க அனுமதித்து அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>28.07.22</td>
<td>137</td>
<td>
<u>பொருள் எண். 35</u>
திருநெல்வேலி மாவட்டம், களக்காடு நகராட்சியானது 01.11.2021 முதல் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் போன்ற வரவு மற்றும் செலவினங்கள் UTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்து வசூலிக்கப்படுவதால், அதற்கான ரசீது சீட்டுகள், பதிவேடுகள் மற்றும் எழுது பொருட்கள் ஆகியவை தூத்துக்குடி மாவட்ட ஹைடெக் பிரிண்டிங் மற்றும் அலைடு சேவை தொழிற்கூட்டுறவு சங்கம் லிட், 2, முடுக்கு தெரு, கோவில்பட்டி – 628 501 என்ற நிறுவனத்தில் இருந்து கொள்முதல் செய்திடவும், அதற்கான செலவு தொகையினை நகராட்சி வருவாய் நிதி கணக்கிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பொருட்கள் விபரம்</th><th>எண்ணிக்கை</th><th>விலை</th><th>மொத்த தொகை</th></tr>
<tr><td>1.</td><td>சொத்துவரி ரசீது புதிய வலைதள ரசீது</td><td>50000</td><td>5.60</td><td>280000</td></tr>
<tr><td>2.</td><td>செலவின பதிவேடு (Payment Book)</td><td>5</td><td>920</td><td>4600</td></tr>
<tr><td>3.</td><td>வரவின பதிவேடு (Receipt Book)</td><td>5</td><td>920</td><td>4600</td></tr>
<tr><td>4.</td><td>வருவாய் நிதி சிட்டா</td><td>5</td><td>1800</td><td>9000</td></tr>
<tr><td>5.</td><td>Property Tax Name Transfer Register</td><td>5</td><td>920</td><td>4600</td></tr>
<tr><td>6.</td><td>Building Licence Register</td><td>5</td><td>920</td><td>4600</td></tr>
<tr><td>7.</td><td>ML Register</td><td>30</td><td>920</td><td>27600</td></tr>
<tr><td>8.</td><td>Asset Register</td><td>5</td><td>920</td><td>4600</td></tr>
<tr><td>9.</td><td>Allotment Register</td><td>5</td><td>920</td><td>4600</td></tr>
<tr><td>10.</td><td>Advance Register</td><td>5</td><td>920</td><td>4600</td></tr>
</table>
</td>
<td>தொகை வழங்க அனுமதித்து அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>11.</td><td>PF Cashbook</td><td>5</td><td>920</td><td>4600</td></tr>
<tr><td colspan="4">மொத்தம்</td><td>353400</td></tr>
<tr><td colspan="4">G.S.T.</td><td>63612</td></tr>
<tr><td colspan="4">பெரு மொத்தம்</td><td>417012</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு :</u><br>
அலுவலகத்திற்கு தேவையான ரசீது சீட்டுகள், பதிவேடுகள் மற்றும் எழுது பொருட்கள் ஆகியவை கொள்முதல் செய்வதற்கு தூத்துக்குடி மாவட்ட ஹைடெக் பிரிண்டிங் மற்றும் அலைடு சேவை தொழிற்கூட்டுறவு சங்கம் லிட், 2, முடுக்கு தெரு, கோவில்பட்டி – 628 501 என்ற நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு 04.05.2022 அன்று வழங்கி 01.06.2022 அன்று பதிவேடுகள் அனைத்தும் விநியோகிக்கப்பட்டுள்ளது. வரப்பெற்ற பட்டியலின்படி தொகை ரூ. 417012/– ஐ வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
</table>